**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**15 ஜனவரி 2016 / 05 ரபீவுல் ஆகிர் 1437**

# <u>அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுதல்</u>

اَلْحَمْدُ للهِ الَّذِي خَلَقَ الإِنْسَانَ فِى أَحْسَنِ تَقْوِيْمٍ، وَأَمَرَنَا
بِالتَّقْوَى وَالْخُلُقِ الْكَرِيْمِ، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ
شَرِيْكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّداً عَبْدُهُ وَرَسُوْلُهُ ، اَللَّهُمَّ
صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِيْنَ.
أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللهِ ، اِتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهْ ، وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ
وَأَنْتُمْ مُسْلِمُوْنَ

மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது தக்வா (பக்தியை) நாம் அனைவரும் இணைந்து அதிகரித்துக் கொள்வோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதன் மூலமாகவும், அல்லாஹ்வினால் தடுக்கப்பட்ட விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும், அல்லாஹ்வின் கிருபையையும் அவனது மன்னிப்பையும் பெற கடின முயற்சி செய்வோமாக! அந்நிலையில் நாம்

நேற்றைய தினத்தை விட, இன்றைய தினத்தில் சிறந்த முஸ்லிம்களாக ஆக முடியும். இன்ஷாஅல்லாஹ். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

நாம் இந்த ஆண்டை, ”மன்னிப்பு” என்பதன் பொருளை அறிவதன் மூலம் துவங்கினோம். மன்னிப்பு என்பது ஒரு நன்னடத்தையாகும். தவறுகளைப் புரிந்த அனைத்து மனிதர்களும் மீண்டும் தமது கால்களில் உறுதியாக நிற்பதற்கு நமது சன்மார்க்கத்தால் அது ஏற்படுத்தப்பட்டதாகும். நாம் மற்றவர்களுக்கு எதிராகத் தவறிழைத்த போதிலும் கூட, தொடர்ந்து அவர்களுக்கும் நமக்கும் மத்தியிலான உறவையும் அமைதியையும் நாம் பாதுகாக்க முடியும் என்பதை மன்னிப்பு உறுதி செய்கிறது. நாம் கடந்த வாரப் பிரசங்கத்தில் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்ட ”மன்னிப்பு” என்பது ஒரு இறைப் பண்பு ஆகும். அதாவது, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் புறத்திலிருந்து நேரடியாகப் பெறப்படும் பண்பு ஆகும்.

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் நவின்ற ஹதீது குத்ஸி ஒன்றை செய்யிதினா அனஸ் பின் மாலிக் (ரலி) பின்வருமாறு அறிவிக்கின்றார்கள்:

**قَالَ اللَّهُ تَعَالَى: "يَا ابْنَ آدَمَ! إِنَّكَ مَا دَعَوْتَنِي وَرَجَوْتَنِي غَفَرْتُ لَكَ عَلَى مَا كَانَ مِنْكَ وَلَا أُبَالِي، يَا ابْنَ آدَمَ! لَوْ بَلَغَتْ ذُنُوبُكَ عَنَانَ السَّمَاءِ ثُمَّ اسْتَغْفَرْتَنِي غَفَرْتُ لَكَ، يَا ابْنَ آدَمَ! إِنَّكَ لَوْ أَتَيْتَنِي بِقُرَابِ الْأَرْضِ خَطَايَا ثُمَّ لَقِيتَنِي لَا تُشْرِكُ بِي شَيْئًا لَأَتَيْتُكَ بِقُرَابِهَا مَغْفِرَةً" رَوَاهُ التِّرْمِذِيُّ**

பொருள்: அல்லாஹ் கூறுகிறான்: ஆதமின் மகனே! நீ என்னை அழைத்து, என்னிடம் மன்னிப்புக் கேட்கும் காலமெல்லாம், நீ செய்த தவறுகளை மன்னிக்கத் தயாராக இருக்கின்றேன். மன்னிப்பதற்கு நான் தயங்கமாட்டேன். ஆதமின் மகனே! உனது பாவங்கள் வானத்திலுள்ள மேகங்களின் அளவுக்கு அதிகமாக இருந்த போதிலும், நீ என்னிடம் மன்னிப்பு கேட்கும் போது உன்னை மன்னிக்கத் தயாராக இருக்கின்றேன். ஆதமின் மகனே! நீ பூமியளவு பாவம் செய்துள்ள நிலையில் என்னைச் சந்தித்தாலும், ”ஷிர்க்” எனும் இணை வைப்புக் குற்றத்தை மட்டும் நீ செய்யாதிருந்தால், அதே பூமியளவு உனக்கு மன்னிப்பை வழங்க நான் தயாராக இருக்கின்றேன். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்)

எனினும், ஜமாஅத்தார்களே! மனிதர்களில் அனைவரும் அல்லாஹ்வின் பாவமன்னிப்பைக் கேட்பதில்லை. அல்லாஹ்வின் மன்னிப்பு தமக்குக் கிடைக்க வேண்டுமென உணர்வதுமில்லை. இவ்விஷயம், மனிதர்களை எவ்வாறு வித்தியாசப்படுத்திக் காட்டுகிறது என நாம் அறிய வேண்டும்.

அடிக்கடி அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேட்பவர்கள், தாம் பரிபூரணமானவர்கள் அல்ல என உணர்கிறார்கள். தம்மிடம் பலஹீனமும் குறைபாடுகளும் உள்ளன எனவும் அறிகிறார்கள். இம்மாதிரியான மக்கள் தம்மிடம் காணப்படும் குறைபாடுகள் விஷயத்தில் விழிப்புணர்வுடன் காணப்படுகிறார்கள்; பலஹீனம் என்பதன் பொருளையும் அறிபவர்களாக உள்ளார்கள். எனவே தான், அடிக்கடி அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்கிறார்கள். தாம் பரிபூரணத்துவத்தை விட்டும் வெகு தொலையில்

உள்ளோம் என அல்லாஹ்விடம் ஒப்புக் கொள்கிறார்கள். படைத்தவனாகிய அல்லாஹ், தங்கள் குறைகளை மன்னிக்கவில்லையெனில் கடும் விபரீதங்கள் எற்படும் என நினைத்து உச்சகட்டமாக கவலை கொள்கிறார்கள். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா இன்னும் நம்மீது கோபமாக உள்ளானோ என நினைத்து வருந்துகிறார்கள். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் பக்கம் திரும்பும் போது அல்லாஹ் நமது வருந்துதலை, பாவமன்னிப்புக் கேட்டதை ஏற்கமாட்டானோ என நினைத்துப் பயப்படுகிறார்கள். அல்லாஹ் மறுமையில் அவனது அன்பு மற்றும் கிருபையின் பார்வையால் நம்மைப் பார்க்கமாட்டானோ எனவும் கவலைப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட கட்டளைகளை அவர்களால் முடிந்த அளவு சிறப்பாக நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்கிறார்கள். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "ஆலி இம்ரான்" எனும் அத்தியாயத்தின் 133-134 வரையிலான வசனங்களில் கூறுகின்றான்:

۞ وَسَارِعُوٓاْ إِلَىٰ مَغۡفِرَةٖ مِّن رَّبِّكُمۡ وَجَنَّةٍ عَرۡضُهَا
ٱلسَّمَٰوَٰتُ وَٱلۡأَرۡضُ أُعِدَّتۡ لِلۡمُتَّقِينَ ١٣٣
ٱلَّذِينَ يُنفِقُونَ فِي ٱلسَّرَّآءِ وَٱلضَّرَّآءِ وَٱلۡكَٰظِمِينَ ٱلۡغَيۡظَ
وَٱلۡعَافِينَ عَنِ ٱلنَّاسِۗ وَٱللَّهُ يُحِبُّ ٱلۡمُحۡسِنِينَ ١٣٤

பொருள்: இறைவனிடமிருந்து வழங்கப்படும் மன்னிப்பு மற்றும் சுவனத்தின் பக்கம் (செல்லும் பாதையில்) விரைந்து செல்லுங்கள்! அது வானங்கள்,

பூமியின் அளவிற்கு விரிவானது. மேலும் அது இறையச்சமுடை யோர்க்காக தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் எத்தகையோர் எனில் வசதியுள்ள நிலையிலும், வசதியற்ற நிலையிலும் செலவழிப்பார்கள். மேலும் அவர்கள் சினத்தை அடக்கிக் கொள்வார்கள். மேலும் மக்(களின் தவறு)களை மன்னித்து விடுவார்கள். இத்தகைய உயர்ந்த பண்பினரை (முஹ்ஸின்களை) அல்லாஹ் நேசிக்கின்றான்.

இமாம் ஷா∴பிஈ (ரஹ்) அவர்கள் ஒருமுறை பின்வருமாறு துஆ (பிரார்த்தனை) கேட்டார்கள்:
யாஅல்லாஹ்! என் மீதுள்ள பாவச் சுமைகள் மிகவும் கடுமையாக உள்ளன. எனினும், உனது மன்னிப்புடன் அவற்றை ஒத்துப் பார்க்கின்ற போது, உனது மன்னிப்பு எனது பாவச் சுமைகளை விட எவ்வளவோ அதிகமாக உள்ளது.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!
தம்மிடமுள்ள பலஹீனத்தின் பொருளை எவர்கள் அறிகின்றார்களோ அவர்கள், மற்ற அனைத்து விஷயங்களை விட அல்லாஹ்வின் மன்னிப்பைப் பெறுவது தான் இவ்வுலகில் மிகச் சிறந்த விஷயமெனக் கருதுவார்கள். இவ்வாறு கருதுவதும் ஒரு பிரார்த்தனை (துஆ) ஆகும். அவர்கள் அல்லாஹ்வின் மீது அன்பு கொண்டுள்ளார்கள் என்பதற்கு அடையாளமாகும்.

மேற்கண்ட திருக்குர்ஆனின் வசனங்கள் மற்றும் இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் ஹதீதின் மூலம், தீர்ப்பு நாளில் தீர்ப்பு வழங்கப்படுவதற்காக, அல்லாஹ்வின் அடியார்கள் அல்லாஹ்வின்

சந்நிதானத்துக்கு வரும் போது, அல்லாஹ்வின் மன்னிப்பு தான் முக்கியமானதாக இருக்கும் என்பது புலனாகிறது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா மன்னிப்பு கேட்பதற்கான வாய்ப்பை தனது அடியார்களுக்கு எப்போதும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றான். அவனது மன்னிப்பின் வாசல் எப்போதும் விசாலமாகவே உள்ளது. காரணம், மற்ற அனைத்து விஷயங்களை விட அவனது அன்பும், கிருபையும் தான் அதிகமானதாகும்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!
ஒரு விஷயத்தை நாம் நன்றாக விளங்கிக் கொள்வது அவசியமாகும். அதாவது, மன்னிப்பு தான், மற்ற எல்லா விஷயங்களை விட முக்கியமானதாகும். இது நமது சன்மார்க்கத்தின் கொள்கையாகவும் அடிப்படையாகவும் உள்ளது. எனினும், இஸ்லாமியச் சட்டங்கள் மற்றும் போதனைகளின் வடிவமாக உள்ள மன்னிக்கும் தன்மையிலிருந்து வழிபிசகிச் செல்லப்படுவதை நாம் அவ்வப்போது கேள்விப்பட்டும், பார்த்தும் வருகின்றோம்.

இந்நிலை, இஸ்லாம் என்றாலே வன்முறை, பழிவாங்குதல், வேதனை செய்தல், தண்டனையளித்தல் என்பது போல் சித்தரித்துக் காட்டுகின்றது. சன்மார்க்கத்தை உறுதியாகப் பற்றிப் பிடிப்பதாகக் கூறிக் கொள்ளும் சிலர் இஸ்லாத்தை இவ்வாறு தான் சித்தரித்துக் காட்டுகின்றனர்.

ஜமாஅத்தார்களே! இவ்விதமானப் போதனைகள் கடுமையான, கருணைச் சிந்தனையற்ற தலைமுறையினரைத் தான் உருவாக்கும். மனிதனிடம் பலஹீனங்கள் உள்ளன என்பதை மறக்கச் செய்து விடும். இப்படிப்பட்ட

தலைமுறையினர் முன்னேற்றம் காண முடியாது; மனிதர்களின் வாழ்க்கையை முன்னேற்றும் ஆற்றலை அவர்கள் பெற முடியாது. மாறாக, அவர்கள் தமது தகுதியின்மையைப் பயன்படுத்தி, மற்றவர்களின் குறைகளைக் காண்பதிலேயே கவனமாக இருப்பார்கள்.

எனவே, நாம் நமது உள்ளங்களின் விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். திருக்குர்ஆன் மற்றும் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் ''சுன்னாஹ்'' எனும் வழிமுறை போதிக்கும் மதிப்பீடுகளால் நமது உள்ளங்களைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும். மன்னிப்பு என்பதன் பொருளையும் அதன் சிந்தனையையும் நாம் நன்றாக அறிய வேண்டும். அல்லாஹ்விடம் மன்னிப்பைக் கேட்க வேண்டும். அவனது கிருபையையும் அன்பையும் பெற முயல வேண்டும்.

இப்பிரசங்கத்தைக் கேட்ட பின், அனைத்து படைப்புகளின் அதிபதியாகிய அல்லாஹ்விடம் நமது பாவத்திற்கான மன்னிப்பைக் கேட்க வேண்டுமென்ற ஆர்வம் நமக்கு ஏற்பட்டிருக்கும் எனக் கருதுகிறேன். மன்னிப்பின் பொருளை அறியும் ஆற்றலைப் பெறுவோமாக! நமது ''ஈமான்'' எனும் ஓரிறை நம்பிக்கை நமது நற்காரியங்களால் பிரகாசிக்கட்டுமாக! அதிகமாகப் பங்களிப்புகளைச் செய்வோமாக! அல்லாஹ்வின் பார்வையில் நமது அந்தஸ்து உயரட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُولُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.